இடமாக வைப்பதா என்று ஒரு போரே நடந்து கொண்டு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எந்த வட்டத்தில் அது வைக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போரில் நான் ஈடுபட விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் போரில் குறைந்தது நடுவராகவாவது இருப்பீர்களா ? (சிரிப்பு).

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கப்படும் என்று நீண்ட காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு செய்வதற்கு எவ்வளவு நாட்கள்தான் ஆகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்வின் அளவைப் பொறுத்தது.

**திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது அந்த மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும், தொழில் நகரமாகவும் இருக்கின்ற கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியையே திருப்பித் திருப்பிக் கேட்கும் அவையாக இந்த அவை மாறக்கூடாது என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது.

### கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புகள்.

* 2471 திரு. வே. இராசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் அமலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிராம நிருவாக அலுவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டுவதற்கான செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

**திரு. வெ. இராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் என்பவர்கள் அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அடிப்படையான ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த கிராமங்களில் தங்கி இருந்தால் தான் அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்குவதற்கும், கிராமத்தில் ஏற்படக்கூடிய சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அவர்கள் சொந்தக் கிராமங்களில் இருந்தால் உடனுக்குடன் தலையிட்டு அதைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இவர்கள் அங்கே குடியிருக்கச் சரியான குடியிருப்பு வசதிகள் இல்லை என்ற காரணத்தால் டவுனில் போய் தங்கி இருக்கிறார்கள். அதனால் கிராம மக்கள் அவர்களிடத்திலே சென்று கையொப்பம் வாங்குவதற்குச் சிரமமாக இருக்கிறது என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூடப் பேசி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் குடியிருப்பு கட்டிக் கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து அவர்கள் தங்குவதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*9.30 மணி*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பணி, அவர்கள் மேற்கொண்டு இருக்கிற பளு, அவர்கள் ஆற்றுகிற தீவிரமான கடமை அனைத்தையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 12,498 கிராம நல அலுவலர்கள் உள்ளனர். படிப்படியான முறையில் கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டலாம் என்ற அடிப்படையில் 1989-90 ஆம் ஆண்டு பார்ட் 2 ஸ்கீமில் கிராம நிர்வாக அலுவலர்களுக்காக 90 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 100 குடியிருப்புகள் கட்டலாம் என்ற செயற் குறிப்பை சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த் துறை ஆணையாளர் அரசுக்கு அனுப்பியிருந்தார். அவருடைய செயற்குறிப்பு, நிதிநிலை காரணமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேலும், அரசின் நிதிநிலை காரணமாக 1990-91-லும் பார்ட் 2 ஸ்கீமிலும் பரிந்துரைக்கப்படவில்லை என்று சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த்துறை ஆணையாளர் தெரித்துள்ளார்,

*1990 ஏப்ரல் 21]*

**திரு. வெ. இராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல தமிழ்நாட்டில் இருக்கின்ற 12,498 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் ஒரே சமயத்தில் குடியிருப்புகள் கட்டித் தருவது சாத்தியக்கூறு இல்லையென்றாலும்கூட வருடத்தில் இவ்வளவு குடியிருப்புகள் என்று நிர்ணயித்து அவர்களுக்குக் கட்டித் தர வேண்டும். அதுவரை, அவர்கள் கிராமங்களிலேயே தங்கியிருந்து பணியாற்றும் வகையில், 100 ரூபாய், 200 ரூபாய் என்கிற வகையில் அவர்கள் வாடகை கொடுக்கிறார்களே, அதை அரசு ஏற்றுக் கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள்மீது பெரிய சுமை சுமத்தப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருப்பதாக அடிக்கடி வருத்தத்தோடு சொல்கிறார்கள். ஜமாபந்தி . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது கிராம நிர்வாக அலுவலர்களைப் பற்றிய விரிவுரை வேண்டாம். வீடு கட்ட வேண்டுமா, வேண்டாமா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு தேவை என்றாலும், பரவலாக அவர்களால் சொல்லப்படுகிற குறைகளைப்பற்றியும் . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது எல்லாம் வினா-விடையில் வராது.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமாபந்தி சமயத்தில் அவர்களுக்கு நிறைய செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுவதாகக் குறை சொல்கிறார்கள். அரசு பொறுப்பேற்று அவர்களுக்குச் செலவாகின்றதைக் கொடுத்தால் அவர்கள் வேதனைப்படுகின்ற நிலை ஏற்படாது. ஆகையால் இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் அடிக்கடி என்னிடத்தில் கேள்விகள் கேட்பதுண்டு. (சிரிப்பு) ஆனால் இப்போது முதல் முதலாக கேள்வி கேட்கிறபோது மூலக் கேள்விக்கும், அவர் கேட்ட கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருப்பதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் தமிழகத்தில் பணியாற்றுவதாகவும், அவர்களுக்கு 100 வீடுகள் கட்டுகின்ற திட்டம் அரசிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இந்த 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒரே சமயத்தில் வீடுகள் கட்ட முடியாது என்பது உண்மை. அவர்கள் சொந்த ஊரில் வேலை பார்க்காமல் சொந்தத் தாலுக்காவில் வேலை பார்க்கலாம் என்பதுதான் தற்போதுள்ள நடைமுறை. ஒவ்வொரு கிராமம் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் எல்லாம் அவர்கள் வசம்தான் இருக்கின்றன. அவை பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே ஒரே இடத்தில் இந்த ஆவணங்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கும் வகையில், உரிய இட வசதியை அரசு செய்து கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்களுடைய கேள்வியில் இருக்கிற நியாயத்தை அரசு புரிந்து, அவர் கேட்ட கேள்விக்கு ஏற்ப, ஆவன செய்யப்படும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன்.

**தண்டத் தீர்வையைக் குறைத்தல்.**

* 7078 **திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

*(அ)* பெரியார் மாவட்டம், காளிங்கராயன், கோபிசெட்டிபாளையம், பவானி போன்ற இடங்களில் மின்சார பம்ப்செட் மூலமாக இறவைப் பாசனம் செய்கின்ற மஞ்சள் போன்ற பயிர்களுக்குத் தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்கும் மனுக்கள் வந்தனவா ?

*(ஆ)* ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* ஆம். தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்டு மனுக்கள் வந்திருந்தன.

*(ஆ)* பெரியார் மாவட்டத்தில், காளிங்கராயன் வாய்க்கால், பவானி மற்றும் காவிரி ஆறுகள் போன்ற அரசு பாசன ஆதாரங்களிலிருந்து அனுமதியின்றி ஆயில் எஞ்சின்/மின் மோட்டார் வைத்து பாசனம் செய்யப்படும் முறையற்ற பாசனங்களுக்கு நீர்ப்பாசன விதிகளின்படி, தண்டத் தீர்வை விகிதங்கள் அரசாணை (பல்வகை) 1668, வருவாய், நாள் 6-11-1987ல்